தூர்வார வேண்டியுள்ளது. இந்த வருடம் அதற்கு ரூ.90 இலட்சம் செலவு ஆகும், maintenance-ல் செய்வதற்கு; I will try.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு 5 அணைக்கட்டுகள் அறிவிக்கப்பட்டன. குறிப்பாக, எனது தொகுதியில், கோமுகி நதியின் குறுக்கே, வரஞ்சிரத்தில் ஓர் அணைக்கட்டும், மணிமுத்தாறு நதியின் குறுக்கே, வீரசோழபுரத்தில் ஓர் அணைக்கட்டும், மயூரா நதியின் குறுக்கே, நயினார்பாளையத்தில் ஓர் அணைக்கட்டும் அறிவிக்கப்பட்டன. இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்துள்ளது என கண்டறியப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அணைக்கட்டுகளை உடனடியாகக் கட்டித் தர ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

112—

கழிவு நீரகற்று நிலையம்

***24419—திரு. ஜெ. கருணாநிதி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தியாகராய நகர் தொகுதி, வடபழனி அழகிரி நகரில், கழிவு நீரகற்று நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

2023 ஏப்ரல் 6]

தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள, வடபழனி அழகிரி நகரில் சுமார் 9 தெருக்கள் உள்ளன. இங்கு சேகரிக்கப்படும் கழிவுநீர், அழகிரி நகர் 6-வது தெருவில் அமைந்துள்ள சாலையோரக் கழிவுநீர் நிலையத்தில் சேகரிக்கப்பட்டு, MMDA *காலனியிலுள்ள கழிவு நீரகற்று நிலையத்திற்கு அனுப்பப்பட்டு வந்தது. அழகிரி நகரிலிருந்து,* MMDA *காலனிக்குச் செல்லும் கழிவுநீர் உந்துக் குழாய் சிறியதாகவும், பழுதடைந்தும் இருந்ததால், கழிவுநீர் பிரச்சினைகள் இருந்து வந்தன. இதைத் தவிர்க்கும்பொருட்டு, அழகிரி நகருக்கும்,* MMDA *காலனிக்கும் இடையேயுள்ள லோகநாதன் 3-வது தெருவில், சாலையோரக் கழிவுநீர் உந்து நிலையம் ஜனவரி 2022-ல் அமைக்கப்பட்டது. மேலும், அழகிரி நகர், கழிவுநீர் நிலையத்திலிருந்து லோகநாதன் 3-வது தெருவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சாலையோரக் கழிவுநீர் உந்து நிலையத்திற்கும் மற்றும் லோகநாதன் 3-வது தெருவிலிருந்து* MMDA *காலனியிலிருந்த கழிவுநீர் நிலையத்திற்கும், புதிதாகக் கழிவுநீர் உந்துக் குழாய்கள் பதிக்கும் பணிகள் ரூ.2.82 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, அடிக்கடி ஏற்பட்டு வந்த கழிவுநீர் வழிந்தோடல் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.*

திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, தியாகராய நகர் தொகுதியிலுள்ள வடபழனி அழகிரி நகரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலுள்ள கங்கையம்மன் கோயில் தெரு, ஒத்தவாடைத் தெரு போன்ற இடங்கள் மக்கள் அதிகமாக உள்ள பகுதிகள். அந்தப் பகுதியில் கழிவு நீரகற்று நிலையம்,* pumping station *இல்லாததால், கழிவுநீர் வழிந்தோடல் பிரச்சினை இருக்கிறது. ஆகவே, அப்பகுதியில் புதிய* pumping station *அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டு*

நீண்டநாட்கள் ஆன காரணத்தால், பல இடங்களிலே சிறிய அளவில் உடைந்தும் காணப்படுகின்றன. இதனைத் தவிர்க்கும்பொருட்டு, அந்தந்த பகுதிகளில் உந்து நிலையங்கள் அமைப்பதற்குரிய விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. எந்த இடங்களில் தேவையென்றாலும், அந்த இடங்களில் அதனைச் செய்து தருவது குறித்து அரசு முடிவெடுக்கும்.

அதேநேரத்தில், கழிவுநீர்க் குழாய்கள் சேதமடைந்த இடங்களில், குறிப்பாக, மாதவரம் மேற்கு, Bank காலனி 5–வது தெரு, மாதவரம், ஔவையார் தெரு, ஓட்டேரி, சுப்புராயன் 3–வது தெரு, கொரட்டூர், வடக்கு மெயின் ரோடு, முகப்பேர், பாரதிதாசன் சாலை, டி.பி. சத்திரத்தில், மயான சாலை அருகில், வடபழனி, தெற்கு சிவன் கோயில் தெரு, தி. நகரில், C.I.T. நகர், 2–வது தெரு போன்ற இடங்களில் தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும், எங்கெங்கு தேவையிருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, உடனடியாக உந்து நிலையங்களை அமைத்து, கழிவுநீர் வழியாத அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.

திரு. ஜெ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தியாகராய நகர் தொகுதி, வடபழனி அழகிரி நகர் பகுதி மக்களின் கோரிக்கையினையேற்று, அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தியாகராய நகர் தொகுதிக்குட்பட்ட C.I.T. நகர், அசோக் நகர், கோடம்பாக்கம், சைதாப்பேட்டை, அப்பாவு நகர் ஆகிய இடங்களிலுள்ள கழிவு நீரகற்று நிலையங்கள், pumping stations ஆகியன தேவையான நேரங்களில் இயங்காததால், அந்தப் பகுதிகளில் கழிவுநீர் பாதைகள் முழுவதிலும் அடைப்பு ஏற்படுகிறது. அதனால், குடிநீர்க் குழாய்களில் கழிவுநீர் கலந்துவிடுகிறது. இதுதான் என்னுடைய தொகுதி முழுவதும் பரவலாக இருக்கும் முக்கியமான பிரச்சினையாகும். முதலில் அமைக்கப்பட்ட pipelines–ன் அளவு சிறியதாக இருந்தது,

2023 ஏப்ரல் 6]

மக்கள்தொகையும் குறைவாக இருந்தது. ஆனால், தற்போது மக்கள்தொகை அதிகமாகிவிட்டது. அதனைக் கருத்தில்கொண்டு, பழைய pipelines–ஐ மாற்றுவதற்கும், சீர் செய்வதற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பிரச்சினை கண்டறியப்பட்டு, C.I.T. காலனி, 1–வது குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம் மெயின் ரோடு, 2–வது தெரு, Income Tax காலனி மெயின் ரோடு, DAV பள்ளிக்கு எதிரில், புரசைவாக்கம், சச்சிதானந்தம் தெரு, பல்லவன் சாலை, ஓட்டேரி, ஸ்டீபன் சாலை, மயிலாப்பூரில், C.I.T. காலனி 1–வது குறுக்குத் தெரு, மயிலாப்பூரில், B.L. சிவசாமி சாலை போன்ற இடங்களிலெல்லாம் இப்பிரச்சினை சரி செய்யப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த இடங்களில் பிரச்சினைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அவற்றை உடனடியாகக் கண்டறிந்து, உரிய நடவடிக்கை எடுத்து, குழாய்களை மாற்ற வேண்டுமென்றாலும் மாற்றலாம். புதிய உந்துநிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னாலும் அதை அமைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்கெனவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தங்கள் பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டு சாலைகள் உள்வாங்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றன என்று கூறியதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கிட்டத்தட்ட ரூ.100 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்து, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், உடனடியாக அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2023 ஏப்ரல் 6

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன் அவர்கள்.*

திரு. A.P. ஜெயசங்கரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, நரசிங்கபுரம் நகராட்சி மற்றும் ஆத்தூர் நகராட்சி ஆகிய இரு நகராட்சிகளிலுள்ள கழிவுநீர், வசிஷ்ட நதியைச் சென்றடைகின்றது. அவ்வாறு வசிஷ்ட நதியைச் சென்றடையும்போது, வசிஷ்ட நதி மிகவும் மாசடைந்த நதியாக மாறி விடுகிறது. இது உலக சுகாதார ஆய்வு அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இரு நகராட்சிகளின் கழிவு நீரினையும் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து சுத்திகரித்து, அதன் பின் கழிவுநீரினை ஆற்றினில் விடுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாநகரப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும், ஓடுகின்ற கழிவுநீர் அந்தக் காலத்திலிருந்து அருகில் ஓடிக்கொண்டிருந்த ஆற்றினில்தான் கலந்துகொண்டிருக்கிறது. சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் canal போன்ற நீர்நிலைகளில் கலக்கின்ற கழிவுநீரினைத் தடுப்பதற்கு ஒரு விரிவான திட்ட அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி வருகின்றபோது, ஏற்கெனவே கூறப்பட்டதுபோன்று, சேலம் வசிஷ்டா நதி மற்றும் ஆத்தூர் நரசிங்கபுரம் மட்டுமல்ல, கழிவுநீர் கலக்கின்ற அனைத்து நகரங்களிலும், அவ்வாறு கலக்காத அளவிற்கு ஒரு திட்ட அறிக்கையினைத் தயார் செய்து, ஒவ்வொரு நகரத்திலும் புதிதாக STP-ஐ உருவாக்கி, கழிவு நீரைச் சுத்தப்படுத்தி, மீண்டும் அந்த நீரை விவசாயத்திற்கு அளிக்கின்ற பணிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்தவகையில், படிப்படியாக*

2023 ஏப்ரல் 6]

ஒவ்வோர் இடமாக எடுத்து வருகிறோம். எனவே, ஆத்தூர் தொகுதி, நரசிங்கபுரமும் எடுத்துக்கொள்ளப்படும். ஏனென்றால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், என்னை இம்மாவட்டத்திற்கான பொறுப்பு அமைச்சராக நியமித்திருக்கிறார்கள். நிச்சயமாக முன்னுரிமை அடிப்படையில் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர் மாசுபடுவதற்கு, கொங்கு மண்டலத்தில் இருக்கிற ஈரோடு, நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களிலிருக்கின்ற பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளின் கழிவுநீர் கலப்பதுதான் முக்கிய காரணமாக விளங்குகிறது. சென்னையில் ஓடுகின்ற நதியைச் சுத்தப்படுத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதுபோன்று, காவிரி ஆற்றிலும் கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்படுமா என்பதை தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டதுபோன்று, பெரிய நகரங்களில், பாதாளச் சாக்கடைத் திட்டங்களைக் கொண்டு, நேரடியாக நீரினைச் சுத்தப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பேரூராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற கழிவு நீரும் சுத்தப்படுத்தப்பட்டு, ஆங்காங்கு இருக்கின்ற ஆறுகளில்தான் விடப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது நல்ல செய்திதான். ஆனால், நிதிநிலைக்கேற்பதான் அப்பணிகளை மேற்கொள்ள முடியும். எனவே, நிதிநிலைமை சரியாக இருக்குமேயானால், அப்பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரது கருத்து ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருகம்பாக்கம் தொகுதியில் 70 சதவிகித

தெருக்களில் அவ்வப்போது கழிவுநீர் overflow ஆகி வெளியே வந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, 129-வது வட்டத்தில் pumping station இல்லாத நிலை உள்ளது. எங்கள் தொகுதியில் அமைக்கப்பட்டிருக்கின்ற pipes அனைத்தும் 40, 50 வருடங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்டவையாகும். ஆகவே, அவற்றை நவீனப்படுத்தி, கழிவுநீர்ப் பிரச்சினைகளுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க முடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கதான் கலைஞர் நகர் பகுதியில் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டிருக்கிறது. அண்ணா சாலையிலிருந்து நேரடியாக கலைஞர் நகர் வரையில் புதிய குழாய் அமைத்து, அதன்மூலம், அப்பகுதி சாலைகளைச் சரி செய்வதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இது தெரியும். எனவே, அந்தப் பணிகள் விரைந்து முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, காவேரிப்பட்டணம் பேரூராட்சியில், கழிவுநீரைச் சுத்தப்படுத்தி விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்காக IUDM திட்டத்தின்கீழ் ரூபாய் 50 இலட்சத்தில் கட்டப்பட்ட சுத்திகரிப்பு நிலையம் செயல்படாமல் உள்ளது. அதைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 ஏப்ரல் 6]

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பேரூராட்சியிலும் இதுபோன்ற நிலைமைகள் இருக்கத்தான் செய்கின்றன. எனவே, ஏற்கெனவே போடப்பட்டிருக்கின்ற அந்தச் சுத்திகரிப்பு நிலையங்கள் பழுதுபட்டிருக்குமானால், அதை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கலாம். இதுபோல் இருக்கிற உந்து நிலையங்கள் அல்லது சுத்திகரிப்பு நிலையங்கள் எல்லாம் பழைய* technology *அளவிலேயே இருக்கின்றன. இன்றைக்கு புதுப்புது யுத்திகள் எல்லாம் வந்துவிட்டன. அதைப்பார்த்து, நமது காவேரிப்பட்டணம் பகுதிக்கு என்ன செய்ய முடியும் என்று அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்வோம். சரிசெய்ய முடியுமென்றால், உடனடியாகச் சரிசெய்வோம். புதிதாக மாற்றித்தான் ஆக வேண்டுமென்றால், அதற்கான நிதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று செய்யலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் பேரூராட்சிக்கு அருகில் இருக்கின்ற தாமிரபரணி ஆற்றிலிருந்து பல நூறு கிலோ மீட்டர் தொலைவிற்கு குடிநீர் வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆனால், அருகிலே இருக்கின்ற ஆலங்குளம் பேரூராட்சிக்கு இப்பொழுது* AMRUT 2.0*–ல் திட்டம் வகுக்கப்பட்டு, தற்போது அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆகவே,* 30 *இலட்சம் லிட்டர் குடிநீர் அங்குள்ள மக்களுக்குத் தேவை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்* AMRUT *திட்டத்தை அங்கு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

கேட்டுக்கொண்ட பிறகுதான், அதுகுறித்து அதிகாரிகளிடம் சொல்லி, அதற்கான திட்டம் இப்போது தீட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இந்த ஆண்டு, Jal Jeevan திட்டத்திலும், AMRUT திட்டத்திலும், கிட்டத்தட்ட பதினாறாயிரம் கோடி ரூபாய்க்கு புதிய திட்டங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே, ஆலங்குளம் பேரூராட்சியும் சேர்ந்திருக்கிறது. நீண்ட காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள், நான் நன்றாக அறிவேன். எனவே, அதை விரைந்து முடித்து, உங்களுக்குத் தேவையான அளவு குடிநீர் தருவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் நிச்சயமாக எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியிலே தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது. கடந்த கால ஆட்சியிலே AMRUT திட்டத்தின் மூலமாக புத்தன்துறையிலிருந்து தண்ணீர் எடுப்பதற்காக கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இன்னும் அந்தப் பணிகள் மந்தமாகச் சென்று கொண்டிருக்கின்றன. ஆகவே, கோடைக் காலத்திலே தண்ணீர் தட்டுப்பாடு வராமல் தடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அறிந்து, எங்கள் துறையினுடைய JMD கடந்த வாரம் நாகர்கோவில் சென்று, அதை ஆய்வு செய்து, அங்கு ஆட்கள் பற்றாக்குறையாக இருந்ததைக் கண்டறிந்து, ஒப்பந்ததாரரைக் கூப்பிட்டு அதிகமான ஆட்களை வைத்து விரைவாகப் பணிகளைச் செய்து முடிக்க வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இசக்கி சுப்பையா அவர்கள் இருக்கிறார். அவருக்கு நன்றாகத் தெரியும். இந்த பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளையும், குடிநீர்

2023 ஏப்ரல் 6]

வழங்கும் பணிகளையும் அவரே பெரும்பாலான இடங்களில் செய்து கொண்டிருக்கிறார். அவரோடு நாங்கள் தினமும் பேசிக் கொண்டிருக்கிறோம். எனவே, விரைந்து முடிப்பதற்குரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுப்போம். Road போடுவது மாதிரி, கட்டடம் கட்டுவது மாதிரி, வெள்ளை அடிப்பது மாதிரி, இப்பணிகள் இல்லை. தரையைத் தோண்டி கொண்டு சென்று மேடு, பள்ளங்கள் பார்க்க வேண்டியிருப்பதால், கொஞ்சம் தாமதமாகிறது. எனவே, விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

113—

வணிக வளாகம்

***44980—முனைவர் T.R.B. ராஜா:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி நகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வணிக வளாகம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மன்னார்குடியில் வணிக வளாகம் கட்டுவதற்கென்று வீட்டு வசதி வாரியத்திலே தனியாக இடமில்லை. எனவே, அந்தத் திட்டத்தை தற்போது நிறைவேற்றுவதென்பது சிரமம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.

முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட நாயகன், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில்தான் மன்னார்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான புதிய பேருந்து நிலையத்தை அங்கே